MC – 1/18

பெயர் - தினேஷ்குமார் RW – 1

தேதி – 02.07.2019

குறுக்கு விசாரணை

நான் மனுதாரரோடு சேர்ந்து வாழ்வதற்கு நீதிமன்றம் மூலம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்ததில்லை. ஈரோடு குடும்பநல நீதிமன்றத்தில் விவாகரத்துகோரி நான் தான் மனு தாக்கல் செய்தேன். மேற்படி விவாகரத்து வழக்கில் இந்த மனுதாரர் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரர் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக தான் எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார் என்றும் நான் மறைத்து பொய்யாக தாக்கல் செய்யவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விவாகரத்து வழக்கில் இந்த மனுதாரர் வழக்கறிஞர் வைத்து எதிர்த்து வழக்கு நடத்தினார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் மனுதாரருக்கு இடைக்கால ஜீவனாம்சம் கொடுக்க உத்திரவாகி அதன் பேரில் நான் மாதம் ரூ.5000/– செலுத்தி வந்தேன் என்றால் சரிதான். மேற்படி இடைக்கால ஜீவனாம்ச தொகை மூன்று மாதம் பாக்கி செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் எம்.இ படித்துள்ளேன். நான் கோவை சிடிஎஸ் நிறுவனத்தில் வேலையில் உள்ளேன். நான் மாத சம்பளமாக ரூ.1,20,000/– பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு மாத சம்பளம் ரூ.48,000/– பிடித்தங்கள்போக கையில் ரூ.30,000/– பெறுகிறேன். நான் பணிபுரியும் நிறுவனத்தில் சம்பள சான்றிதழ் கேட்டால் கொடுப்பார்கள். இந்த வழக்கில் நான் எனது சம்பள பட்டியலை தாக்கல் செய்யவில்லை. மேற்படி சம்பள சான்றிதழை ஒப்படைத்தால் நான் மாதம் ரூ.1,20,000/– சம்பளம் வாங்குவது தெரிந்துவிடும் என்பதால் தான் ஒப்படைக்கவிலலை என்றால் சரியல்ல. ஈரோட்டில் எனக்கு பொதுவில் பாத்தியப்பட்ட வீடு, மில், கடைகள் ஆகியன உள்ளது என்றால் சரியல்ல. வீடு எனது தந்தை பெயரில் உள்ளது. மேற்படி வீடு மாடி வீடு என்றால் சரியல்ல. ஓரே போர்சன் தான் உள்ளது. சுமார் 750 சதுர அடி உள்ள வீடு. இரண்டு கடைகள் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கடைகளில் இருந்து 13,000/– வாடகை வருகிறது என்றால் சரியல்ல. மில் இருக்கிறது என்றால் சரியல்ல. எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட ஆர்.எஸ் மாவு மில் உள்ளது என்றால் சரியல்ல. ஆர்.எஸ் மாவு மில் யாருக்கு சொந்தமானது என்றால் அவ்வாறு ஒரு மில் இல்லை. இது தவிர எனது குடும்பத்திற்கு சொந்தமான ஆட்டோ பைனான்ஸ் மற்றும் டிராவல்ஸ் உள்ளது அதன் மூலம் 50,000/– வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து எனது குடும்பத்தாரின் பேச்சை கேட்டுக்கொண்டு மனுதாரிடம் திருமணத்தின் போது கொடுத்த சீர்வரிசைகள் பத்தாது என்று கூறி மேலும் ரூ2,00,000/– கேட்டு மனுதாரரை கொடுமைப்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது கார் வாங்க மனுதாரின் தகப்பனார் ரூ 5,00,000/– கொடுத்திருந்தார் என்றும் அது போதாது என்று மீண்டும் பணம் கேட்டு மனுதாரரை கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் இவ்வாறு வரதட்சணை கேட்டு மனுதாரரையும் அவரது குடும்பத்தையும் கேவலமாக பேசியதால் தான் மனுதார் 14.03.14ம் தேதி தனது தகப்பனாரை வரச்செல்லி அவர் பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. அதன் பின்பு சேர்ந்து வாழ மனுதாரர் என்னுடைய பெற்றோர் வீடான ஈரோடு சென்றபோது எனது தாயார் மனுதாரர் மீது சுடுதண்ணி ஊற்றி காயப்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது மனுதாரருக்கு அணிவித்த 30 பவுன் நகைகளில் 13 பவுன் நகைகளை தவிர மீதமுள்ளவை என் வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர் தற்போது வாடகை வீட்டில் குடியிருந்து தன்னை தானே பராமரித்துக்கொள்ள மிகுந்த சிரமப்பட்டு வருகிறார் என்றால் சரியல்ல. மனுதாருக்கு தற்போது வீட்டு வாடகை, குடிநீர், மின்கட்டணம், படிப்பு செலவு போன்றவற்றிக்கு மாதம் ரூ 30,000/– ஜீவனாம்சம்

தேவை என்றால் மனுதாரர் வசதியாக தான் உள்ளார். நான் மனுதாரை கேவலமாக பேசியதற்கு மனுதாரர் ஆத்திரத்தில் பேசிய வார்த்தைகளை பயன்படுத்தி பொய்யான காரணங்களை கூறி ஈரோடு நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி விவாகரத்து மனுவின் மேல் மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் விவாகரத்து பெற்று இருந்தாலும் மனுதாரர் வேறு திருமணம் செய்யாதவரை மனுதாரை சட்டப்படி பராமரிக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. மனுதாரர் கோரியுள்ள ஜீவனாம்ச தொகை ரூ.30,000/- கொடுக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல.